மே 2016ம் மாதத்திற்கு
சம்பளம் வழங்கும் அதிகாரம்

பள்ளிக் கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை—600 009.

கடித எண்.12772/ அகஇ/2016—1, நாள் 02.06.2016

அனுப்புநர்
திருமதி த.சபிதா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை—35.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை—18/35.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை—15.

ஐயா,

பொருள் பள்ளிக் கல்வி — அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் — 2014—2015ஆம் கல்வியாண்டில் 50 ஊராட்சி ஒன்றிய/ நகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது — மே 2016 மாதத்திற்கான ஊதியம் வழங்கும் அதிகார ஆணை வழங்கக் கோருதல் — குறித்து.

பார்வை
1. அரசாணை நிலை எண்.199, பள்ளிக் கல்வித் துறை, நாள் 2.12.2014
2. பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை—6 அவர்களின் கடித ந.க.எண்.69005/எல்/இ3/2015, நாள் 9.5.2016.

********

மேலே பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் பள்ளி ஒன்றுக்கு 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 50 நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களை உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தியும் மற்றும் 50 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும்போது நடுநிலைப் பள்ளிகளில் ஏற்கனவே செயல்பட்டு வரும் 1 முதல் 5 வகுப்புகள் தொடக்கப் பள்ளிகளாக நிலையிறக்கம் செய்யப்படுவதால், அப்பள்ளிகளுக்கு தலா ஒரு தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 50 தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களும் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு 1.12.2015 முதல் ஓராண்டு நிறைவடைவதால் 2.12.2015 முதல் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது தொடர்பாக தனியே பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

3. மேலே பார்வை 2ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் 1.3.2015 வரை மூன்று மாதங்களுக்கு துறைத் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் தொடர்ந்து ஊதியம் பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், ஏப்ரல் 2016 மாதம் வரை அரசு கடிதங்களின் மூலம் விரைவூதிய ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும், தொடர் நீட்டிப்பு ஆணை வழங்குவதில் கால தாமதம் ஏற்படும்பட்சத்தில் மேற்காண் 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், 50 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் மற்றும் 50 தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களுக்கு மே 2016 முதல் மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay authorisation) வழங்கும்படி பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதால், 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (ரூ.9300–34800 + தரஊதியம் 4600), 50 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் (ரூ.9300–34800 + தரஊதியம் 4800) மற்றும் 50 தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களுக்கு (ரூ.9300–34800 + தரஊதியம் 4500) மே 2016 மாதத்திற்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான பட்டிகள், உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும்போது அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொண்டு சம்பளம் அனுமதிக்குமாறு தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

5. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண்.30855/கல்வி-II/2016, நாள் 31.05.2016ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
நிதி (கல்வி–II) துறை, சென்னை–9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.